**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 431** **நாள்: 11.12.2025**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு,வி.க. நகர் மண்டலத்திற்குட்பட்ட சென்னைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 567 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு,வி.க. நகர் மண்டலத்திற்குட்பட்ட சென்னைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 567 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை இன்று (11.12.2025) வழங்கினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்/சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் அவர்கள், இன்று (11.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-70, பந்தர்கார்டனில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் 11 ஆம் வகுப்பு பயிலும் 120 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மார்க்கெட் சாலையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் 198 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொளத்தூர் பள்ளி சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் 249 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் மத்திய வட்டார துணை ஆணையர் திரு. எச்.ஆர். கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திருமதி. சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.ஏ.நாகராஜன், திருமதி ஸ்ரீதணி, திருமதி கு.சாரதா, பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**